


# ஐம்பது நாட்கள் : காரிருளின் முடிவில் ஒளிக்கீற்றுக்களா?

## (2018 ஒக்டோபர் 26 முதல் டிசெம்பர் 15 வரையான அரசியல் நகர்வுகள் பற்றிய மக்களின் கருத்தறிதல்)

விதுர பிரபாத் முணசிங்ஹ

LAW & SOCIETY TRUST

# ஐம்பது நாட்கள் :
# காரிருளின் முடிவில் ஒளிக்கீற்றுக்களா?

## (2018 ஒக்டோபர் 26 முதல் டிசெம்பர் 15 வரையான அரசியல் நகர்வுகள் பற்றிய மக்களின் கருத்தறிதல்)

விதுர பிரபாத் முணசிங்ஹ

**ஐம்பது நாட்கள் : காரிருளின் முடிவில் ஒளிக்கீற்றுக்களா?**
**(2018 ஒக்டோபர் 26 முதல் டிசெம்பர் 15 வரையான அரசியல் நகர்வுகள் பற்றிய மக்களின் கருத்தறிதல்)**

**© லோ அன்ட் சொஸைட்டி டிரஸ்ட், 2019**

இந்த ஆவணம் மற்றும் அதன் வெளியீட்டாளர் பற்றிய முறையான அறிமுகப்படுத்தலின் பின்னர் இந்நூலின் உள்ளடக்கத்தை அல்லது அதன் பகுதிகளை வணிகம் அல்லாத நோக்கத்திற்காக மட்டும் மேற்கோள் காட்டுவதற்கும் பிரதி எடுப்பதற்கும் அனுமதி உண்டு

**விதுர பிரபாத் முணசிங்ஹ**

**மீள்வாசிப்பு மற்றும் சரிபார்த்தல் -** மாடசாமி விஜயகாந்த்

**அட்டைப் படம் மற்றும் பக்க ஆக்கம் -** பிரபாத் ஹேமந்த குமார

**வெளியீடு :**

**LAW & SOCIETY TRUST**

**லோ அன்ட் சொஸைட்டி டிரஸ்ட்**
இல. 03, கின்சி டெரஸ்,
கொழும்பு 00800.
இலங்கை.
தொலைபேசி : +94 (0) 11 268 48 45
தொலை நகல் : +94 (0) 11 2686843
இணையம் : www.lstlanka.org

# ஐம்பது நாட்கள் : காரிருளின் முடிவில் ஒளிக்கீற்றுக்களா?

**(2018 ஒக்டோபர் 26 முதல் டிசெம்பர் 15வரையான அரசியல் நகர்வுகள் பற்றிய மக்களின் கருத்தறிதல்)[1]**

**விதுர பிரபாத் முணசிங்ஹ[2]**

## அறிமுகம்

திகதி : 2018 ஒக்டோபர் 26.

நாங்கள் மூவரும் கள ஆய்வு ஒன்றை முடித்துக்கொண்டு மதியம் 1.00 மணியளவில் மொனராகலையிலிருந்து கொழும்பை நோக்கிப் புறப்பட்டோம். எங்கள் மூவரின் கையடக்கத் தொலைபேசி பற்றறிகள் இயங்காததன் காரணமாக செயலிழந்து

---

1. சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை அறநிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சகுந்தலா கதிர்காமர் இந்த சிக்கலான அரசியல் சூழ்நிலைமையில் மக்களின் பிரதிபலிப்புகளையும் கருத்துக்களையும் திரட்டுதல் முக்கியமானது என்ற அடிப்படைக் கருத்தினை முன்வைத்தார். ஒருமாதம் போன்ற குறுகிய காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்பட்ட தொடர் நேர்காணல்களை வெற்றியாக்கிக்கொள்வதற்கு சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை அறநிலையத்தின் பதவியணியில் இடம்பெறும் பீ.எம். சேனாரத்ன, அநுராதி ஜயசிங்ஹ, தர்மிகா செல்வராஜ், சம்றுத் ஜெஹான், விஜயகாந்த் மாடசாமி, இமே'ா பெரேரா, கௌசல்யா ஆரியரத்ன, நடா'ா வன்ஹொப் ஆகியோர் வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி பாராட்ட வேண்டும். நாட்டிலுள்ள பல மாவட்டங்களுக்கு விஜயம் செய்து நீண்ட நேர்காணல்களை நெறிப்படுத்திய மற்றும் தரவுப் பகுப்பாய்வுக்கு உதவிய சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை அறநிலையத்தின் ஆராய்ச்சி உதவியாளர்களான பிரபாத் ஹேமந்த குமார, மாலிங்க ஜயரத்ன, இ'ான் சாமர வட்டவலகே மற்றும் லக்'ான் அபேவர்தன ஆகியோரின் காத்திரமான பங்களிப்பிற்கு மனமார்ந்த நன்றிகள். மேலும், இச்செயற்பாட்டினுள் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை அறநிலையத்தின் தொழிற்பாட்டு மற்றும் நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர் சந்துன் துடுகல திறனாய்வு ரீதியாக வழங்கிய ஒத்துழைப்புக்காக நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். ஆகவே, இந்த ஆய்வு உண்மையிலேயே கூட்டு முயற்சியின் ஒரு விளைவு.

2. விதுர பிரபாத் முணசிங்ஹ சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை அறநிலையத்தில் சிரே'ட ஆராய்ச்சியாளராகப் பணியாற்றுகின்றார்.

காணப்பட்டதோடு, நாங்கள் பயணம் செய்த வாகனத்தின் வானொலிப் பெட்டியும் இயங்கக்கூடிய நிலையில் இருக்கவில்லை. ஆகவே நாங்கள் மூவரும் அதிகமான நேரத்தை நித்திரையில் கழித்தோம். இரவு 7.15 மணியளவில் முதலாமவர் நுகேகொடையில் எம்மிடமிருந்து விடைபெற்றபோது அவரின் வீட்டிற்கு எதிரே நின்ற நபரொருவர் கூறிய செய்தியை நம்புவதற்கு எங்களுக்கு அதிக நேரம் தேவைப்பட்டது. மஹிந்த ராஜபக்ச மீண்டும் பிரதமராக பதவிப் பிரமாணம் செய்துகொண்டார் என்பதுதான் அச்செய்தி. அதிகரித்த ஆவலுடன் சுற்றுவெளியை நோக்கியபோது ஒவ்வொரு வீட்டிலும் கடையிலும் மக்கள் தொலைக்காட்சியூடாக இச் செய்தியைப் பார்த்துக் கொண்டிருப்பதையும் ஒருசில இடங்களில் ஒன்றுகூடிய சில நபர்கள் பட்டாசு ஆரவாரம் செய்வதையும் எம்மால் காணமுடிந்தது. நாம் மொனறாகலையில் இருந்து புறப்பட்டபோது திடீர் ஆட்சிமாற்றம் ஒன்றுக்கான எந்தவொரு சூசகமும் தென்படவில்லை. அதேபோல் வெளியுலகத்தாரின் தொடர்புகளிலிருந்து அந்நியப்பட்டிருந்த சிலமணி நேரங்களில் எல்லாமே மாறியிருந்தன. எல்லாம் சரியாக நடந்திருந்தால் இன்னும் குறைந்தது 1½ வருடங்களின் பின்னர் ஆட்சிமாற்றம் ஒன்றுக்கான வாய்ப்பு இருந்தது.[3] வெளியுலகத்தாரின் தொடர்புகளின்றி நாங்கள் பயணித்த சில மணி நேரங்கள் காலத்தினூடாக எதிர்கால இடைவெளிக்குள் சென்றுவிட்ட அனுபவம் கிடைத்ததாக பின்நாட்களில் எம்மால் உணர முடிந்தது.

---

3. 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் பிரகாரம் பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 5 வருடங்களாகக் காணப்படுவதோடு, இறுதியாக 2015ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17ஆம் திகதி பொதுத்தேர்தல் நடாத்தப்பட்டது. அதன்படி தற்போதைய பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 2020 ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதி முடிவுக்கு வரும். அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்ட 19வது திருத்தத்தின்படி ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 4½ வருடங்களைப் பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே பாராளுமன்றைக் கலைக்க முடியும்.

ஒக்டோபர் 26 ஆம் திகதியிலிருந்து இன்றைய நாள்[4] வரையான கடந்துபோன சுமார் ஐம்பது நாட்கள் காலப்பகுதியில் எமது நாட்டில் அரசியல், பொருளாதாரம், சட்டம் மற்றும் சமூகத் தளங்களில் நெருக்கடிகள் தோன்றியதோடு, அச்சம்பவங்கள் அரசியல் தொடர்பில் நாட்டு மக்கள் மத்தியில் மிகவும் ஆக்கபூர்வமான உரையாடலொன்று கட்டியெழுப்பப்படுவதற்குக் காரணமாயின. அந்த உரையாடல்கள் பல கோணங்களில் ஜனநாயகம், மக்களின் இறைமை, சட்டத்தின் ஆட்சி, சமூக கருத்தொருமைப்பாடுகள், அரசியல் நாகரிகம் போன்ற பல தளங்களை நோக்கி விரிவு கண்டிருந்தன. தமது சமூக அரசியல் பற்றிய புரிதல் எந்த மட்டத்தில் இருந்தாலும் மக்கள் எல்லா சந்தர்ப்பங்களிலும் இதுபோன்ற தலைப்புகள் தொடர்பில் திறனாய்வாளர்களாக இயங்குவார்கள் என்பதை எவராலும் புறக்கணித்துவிட முடியாது. எவ்வாறாயினும், அந்த எண்ணக்கருக்களுடனான அவர்களின் ஊடாட்டமும், அதுபற்றிய அவர்களின் கண்ணோட்டமும் தம்முன்னே சிக்கலான சமூக, அரசியல் அசைவுகள் நிகழ்கின்ற மற்றும் தாமும் அதனால் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலைமைகளில் வெளிப்படுகின்றதேயொழிய அரசியல் குழப்பமில்லாத காலப்பகுதியில் அவ்வாறு நிகழ்வதில்லை. கடந்த 1½ மாத காலப்பகுதி, நாட்டு மக்கள் மேற்படி அந்நியப்பட்ட எண்ணக்கருக்கள் தொடர்பில் உயிரோட்டமான தமது சிந்தனைகளை வெளிப்படுத்திய, அத்தோடு அவை தொடர்பில் பலதரப்பட்ட இடையீடுகளை மேற்கொண்ட ஒரு காலப்பகுதியாகும். ஆகவே இவ்வாறான அரசியல் குழப்பம் நிலவும் ஒரு சூழலில் ஜனநாயகம், மக்களின் இறைமை பற்றி மக்கள் எவ்வாறு சிந்திக்கின்றனர் என்பதை நுணுகி ஆராய்தல் இந்த ஆய்வின் நோக்கமாகும்.

4. இந்தக் கட்டுரை 2018 டிசெம்பர் 08 – 15ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டது.

இன்னுமொரு கோணத்தில் துரிதமாக மாறிவரும் தோற்றப்பாடுகளுக்கு மத்தியில் மக்களது கருத்துக்களின் காலப்பொருத்தத்தினை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக மிகவும் வேகமாக தரவுகளைச் சேகரித்தலும் அவற்றைப் பகுப்பாய்வு செய்தலையும் மேற்கொள்ளவேண்டியிருந்தது. அதன்படி இத்தரவுகளைச் சேகரித்தல் பற்றிய பரபரப்பான சம்பவத்திற்கு கால்கோளிடப்பட்ட 26 ஆம் திகதியிலிருந்து 3 நாட்களின் பின்னர், அதாவது ஒக்ரோபர் 29 ஆம் திகதியில் ஆரம்பித்து சரியாக ஒரு மாத காலப்பகுதியினுள் இவ்ஆய்வினை நாங்கள் பூர்த்தி செய்துள்ளோம். இந்த ஆய்வுக்காக நாட்டின் 22 மாவட்டங்களில் பல்வேறு மட்டங்களிலுள்ள ஆண்களும் பெண்களுமாக 143 பேரிடம் நீண்ட நேர்காணல்கள் நடாத்தப்பட்டன. இந்த 143 பேர் பொரளை, தலவத்துகொட, பம்பலப்பிட்டி, கிரிபத்கொட, பாணந்துறை, ரத்துபஸ்வல, புத்தளம், அநுராதபுரம், பொலன்னறுவை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களபப்பு, காத்தான்குடி, அம்பாறை, பொத்துவில், சியம்பலாண்டுவ, பானம, வெல்லவாய, மொனராகல, புத்தல, பண்டாரவளை, காலி, மாத்தறை, வலஸ்முல்ல, இரத்தினபுரி, கண்டி, மாத்தளை, குருநாகல், பதுளை மற்றும் தலவாக்கலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர். நேர்காணல்களுக்கு உட்படுத்திய நபர்கள் தமது கருத்துக்களை மிகவும் வேகமாகவும் தீவிரமாகவும் கட்டியெழுப்பப்பட்ட சமூக அரசியல் தோற்றப்பாடுகளின் ஊடான சம்பவங்களால் பாதிக்கப்பட்டிருப்பதால் இந்த ஒரு மாத காலத்தினுள் நிகழ்ந்த அத்தோற்றப்பாடுகளை நாம் இங்கே சுருக்கமாகத் தருகின்றோம்.

## சம்பவங்களின் ஒழுங்குமுறை

■ **ஒக்டோபர் 26 –** ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தேசிய அரசாங்கத்திலிருந்து விலகும் முடிவை அறிவித்தது. ஜனாதிபதி

சிறிசேன, ரணில் விக்கிரமசிங்ஹவை பிரதமர் பதவியிலிருந்து நீக்கி[5], அமைச்சரவையைக் கலைத்து[6], மஹிந்த ராஜபக்சவை பிரதமராக நியமித்து[7] மூன்று வர்த்தமானிப் அறிவித்தல்களை வெளியிட்டார்.

■ **ஒக்டோபர் 27 —** ரணில் விக்கிரமசிங்ஹ உள்ளிட்ட ஐக்கிய தேசிய முன்னணி ஜனாதிபதியின் முடிவை ஏற்றுக்கொள்ளாது அலரி மாளிகையில் நிலைகொண்டிருந்தது.

■ **ஒக்டோபர் 27 —** ஜனாதிபதியினால் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி வரை பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டது.

■ **ஒக்டோபர் 28 —** பாராளுமன்ற உறுப்பினர்களின் கட்சித்தாவல் படலம் ஆரம்பமாகிறது.

■ **ஒக்டோபர் 29 —** இன்றிலிருந்து நவம்பர் மாதம் 9 ஆம் திகதி வரை பல சந்தர்ப்பங்களில் புதிய அமைச்சரவை அமைச்சர்கள் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

■ **ஒக்டோபர் 30 —** பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு கோரி 128 உறுப்பினர்களின் ஒப்பங்களுடன் கடிதமொன்று சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது.

■ **ஒக்டோபர் 30 —** ஜனாதிபதியின் முடிவுக்கு எதிர்ப்பு மற்றும் ஆதரவு தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் ஆரம்பமாகின.

■ **நவம்பர் 02 —** பாராளுமன்ற உறுப்பினர்களை பணம் கொடுத்து வாங்குவதாக மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

---

5. 2094/43ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.

6. 2094/43யுஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.

7. 2094/44ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.

■ **நவம்பர் 02 —** மஹிந்த ராஜபக்சவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டது.

■ **நவம்பர் 04 —** பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டும் திகதி நவம்பர் 14 என அறிவித்து ஜனாதிபதியினால் வர்த்தமானிப் பத்திரிகையொன்று வெளியிடப்பட்டது.[8]

■ **நவம்பர் 09 —** ஜனாதிபதியினால் பாராளுமன்றம் கலைக்கப்படுவதாகவும் ஜனவரி 05 ஆம் திகதி பொதுத்தேர்தல் நடாத்தப்படுவதாகவும் தெரிவித்து அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையொன்று வெளியிடப்பட்டது.[9]

■ **நவம்பர் 10 —** ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தைக் கலைக்க எடுத்த முடிவு அரசியலமைப்புக்கு முரணானது எனத் தெரிவித்து, குறித்த வர்த்தமானிப் பத்திரிகையை இரத்துச் செய்யுமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் 13 மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

■ **நவம்பர் 13 —** உயர்நீதிமன்றம் அந்த மனுக்களை விசாரணை செய்ய முடிவு செய்ததோடு ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட வர்த்தமானிப் பத்திரிகையை இடைநிறுத்தும் இடைக்காலத் தடையுத்தரவு ஒன்றையும் வெளியிட்டது.

■ **நவம்பர் 14 —** பாராளுமன்றம் மீண்டும் கூடுகின்றது. பாரிய களேபரத்திற்கு மத்தியில் புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கூடுதலான வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

■ **நவம்பர் 15 —** 122 உறுப்பினர்களின் வாக்குகளால் மஹிந்த ராஜபக்சவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட்டதாகவும் அதன்படி அரசியலமைப்புக்கு

8. 095/50ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.

9. 2096/70ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.

அமைவாக அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்து சபாநாயகரினால் ஜனாதிபதிக்குக் கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டது.

■ **நவம்பர் 15 —** பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட்ட விதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் முறைப்படி நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சமர்ப்பித்து நிறைவேற்றிக்கொள்ளுமாறு ஜனாதிபதியினால் சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டது.

■ **நவம்பர் 16 —** மஹிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு தெரிவிக்கும் உறுப்பினர்கள் சபாநாயகர் தன்னுடைய கடமைகளை மேற்கொள்ள இடமளிக்கவில்லை என்பதோடு பாரிய இடையூறுகளுக்கு மத்தியில் இரண்டாவது தடவையாகவும் மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்திற்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை இரண்டாவது முறையாகவும் நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகரினால் அறிவிக்கப்பட்டது. அது நிறைவேற்றப்பட்ட விதத்திற்கு ஆட்சேபனை தெரிவித்த ஜனாதிபதி அம்முடிவினை மீண்டும் ஏற்றுக்கொள்ளவில்லை.

■ **நவம்பர் 24 —** மஹிந்த ராஜபக்ச மற்றும் அவரின் அமைச்சரவை நியமனம் சட்டத்திற்கு முரணானது என்பதால் அவர்களின் செயற்பாட்டைத் தடைசெய்து “க்வோ வொரென்ரோ” ஆணையொன்றை வழங்குமாறு கோரி 122 பாராளுமன்ற உறுப்பினர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தனர்.

■ **நவம்பர் 29 —** புதிய அமைச்சரவை மற்றும் அமைச்சின் செயலாளர்கள் அரச நிதியைப் பயன்படுத்துவதைத் தடைசெய்யும் பிரேரணையொன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

■ **டிசெம்பர் 03 —** பாராளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரும் விரும்பம் தெரிவித்தாலும் ரணில் விக்கிரமசிங்ஹவுக்கு மீண்டும் பிரதமர் பதவியை வழங்கமாட்டேன் என ஜனாதிபதி தெரிவித்தார்.

■ **டிசெம்பர் 07 —** மஹிந்த ராஜபக்ச மற்றும் அவரது அமைச்சரவையின் செயற்பாட்டைத் தற்காலிகமாக நிற்பாட்டும் க்வோ வொரென்ரோ ஆணையை மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியது. (மஹிந்த ராஜபக்ச அந்த ஆணைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு ஒன்றைச் சமர்ப்பித்தார்)

■ **டிசெம்பர் 08 —** மஹிந்த ராஜபக்சவிற்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாமைக்கான காரணம் உறுப்பினர்களை விலைபேசியபோது அவ்விலை தாங்கிக்கொள்ள முடியாதளவு உயர்ந்து காணப்பட்டமைதான் என ஜனாதிபதியினால் தெரிவிக்கப்பட்டது.

■ **டிசெம்பர் 12 —** ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக நியமிக்கக் கோரிய பிரேரணையொன்று பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

■ **டிசெம்பர் 13 —** பாராளுமன்றத்தைக் கலைப்பதாக அறிவித்து ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட வர்த்தமானிப் பத்திரிகை அரசியலமைப்புக்கு முரணானது என உயர்நீதிமன்றம் முடிவு செய்தது.

■ **டிசெம்பர் 15 —** மஹிந்த ராஜபக்ச தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்தார்.


## ஒக்டோபர் 26 சம்பவம் தொடர்பில்....

எமது உரையாடல் ஒவ்வொன்றும் இத்தொடர் சம்பவங்களுக்கு விதை தூவப்பட்ட ஒக்டோபர் 26 ஆம் திகதி நிகழ்ந்த சம்பவத்தை ஆதாரமாகக் கொண்டே ஆரம்பிக்கப்பட்டது. நாம் நேர்காணலில் இணைத்துக்கொள்ளப்பட்ட 143 பேரில் 50 பேர் (35%) குறித்த சம்பவம் தொடர்பில் தமது உடன்பாட்டைத்

தெரிவித்திருந்ததோடு, 52 பேர் (36%) அதுதொடர்பில் தமது அதிருப்தியைத் தெரிவித்திருந்தனர். மேலும், 25 பேர் (18%) தமக்கு வருத்தத்தை ஏற்படுத்தியதாகவும், 26 ஆம் திகதி நிகழ்ந்த சம்பவத்தின் நன்மைகளை அல்லது தீமைகளை முடிவு செய்வதற்கு தாம் தவறியதாகவும் தெரிவித்தனர். 16 பேர் அது தொடர்பில் திட்டவட்டமான கருத்து எதனையும் தெரிவிப்பதற்கு விரும்பவில்லை.

## வரைபடம்

26 ஆம் திகதி சம்பவம் தொடர்பில் மகிழ்ச்சியையும் அதிருப்தியையும் தெரிவித்த நபர்கள் எண்ணிக்கை அடிப்படையில் கிட்டத்தட்ட ஒரேயளவில் காணப்பட்டபோதும் அதிருப்தியை வெளியிட்ட 52 பேரில் 7 பேர் (காலி, பாணம மற்றும் பொலன்னறுவை) தவிர்ந்த எஞ்சிய அனைவரும் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், புத்தளம், காத்தான்குடி, வெல்லவாய மற்றும் தலவாக்கலை போன்ற பிரதேசங்களுக்குரிய தமிழர்களாகவும் முஸ்லிம்களாகவும்




**2018 ஒக்டோபர் 26 ஆம் திகதி நிகழ்ந்த சம்பவம் பற்றி மக்களின் கருத்துக்கள்**
(வரைபடம் 01)

காணப்பட்டமை சிறப்பம்சமாகும். பொதுவாக நோக்கும்போது 26 ஆம் திகதி சம்பவம் தொடர்பில் உடன்பாடு தெரிவிக்காமைக்கான காரணமாகத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களில் பொதிந்திருந்த உணர்வலைகளைப் பானம பிரதேசத்தில் நாம் சந்தித்த சிங்களப் பெண்ணொருவரின் கூற்றினூடாகப் பதிவு செய்வோமாயின்



புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ச 2018 ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டபோது

மூலம் : **http://nepallive.com/story/35096**

*“26 ஆம் திகதி சம்பவம் பற்றி ஸ்ரீ லங்காகாரர்களும் (ஸ்ரீ.ல.சு.க.) வியந்து போனார்கள். அதில் ஒருவர்தான் என்னுடைய மாமனார். ஓர் இரவில் அரங்கேற்றப்பட்ட இச்செயல் அநீதியானதென அவர் குறிப்பிட்டார். இருந்தாலும் கட்சிக்காரர்கள் என்றவகையில் அவர்கள் அதை வெளிப்படக் கூறமாட்டார்கள். 26 ஆம் திகதி தங்களுடைய அரசாங்கம் ஆட்சிபீடம் ஏறிய மகிழ்ச்சியில் அவர்கள் பட்டாசு கொளுத்தினார்கள். வழக்கு தீர்ப்பின்[10] பின்னர் ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்கள் பட்டாசு கொளுத்தினார்கள். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்காரர்கள் அதை ஒரு*

*பிரச்சினையாகவும் எடுத்துக்கொள்ளவில்லை. ஏனென்றால் அனுபவிக்கக்கூடாத ஒரு குதூகலத்தையே அவர்கள் அனுபவித்தார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும்.''*

26 ஆம் திகதி பட்டாசு சத்தம் கேட்டபோது காட்டு யானைகள் ஊருக்குள் புகுந்துவிட்டதாக எண்ணி தான் அஞ்சியதாக வெல்லவாய பிரதேசத்துப் பெண் ஒருவர் தெரிவித்தார்.[11] அவர் அச்சம்பவம் பற்றிக் குறிப்பிட்டபோது, ''எவருக்கும் தெரியாமலேயே அரசாங்கத்தை மாற்றிவிட்டார்கள்''[12] என்றார். எவருக்கும் அறிவிக்காமல் பாராளுமன்றம் அல்லது மக்களுடன் எந்தவொரு கலந்துரையாடலையும் மேற்கொள்ளாமல் செய்யப்பட்ட 26 ஆம் திகதி மாற்றம் எம்மிடம் கருத்துத் தெரிவித்த பெரும்பாலானவர்களை திரிசங்கு நிலைக்கு ஆளாக்கியது. சுருக்கமாகக் கூறுவோமாயின் அவர்கள் ''செய்த விதம் தவறானது''[13] எனக்கூறினர். அநேகமானோர் இச்சம்பவத்தை ஓர் அரசியல் சதியெனக் கருதினர். அவர்களின் கருத்துப்படி, ''இரண்டு அல்லது மூன்று தலைவர்களின் பிரச்சினையை நாட்டின் பிரச்சினையாக மாற்றிக்கொள்ளுதல்''[14] ஒருசிலர் இதனை ''பாசிசவாத முடிவு''[15] ''அரசியலமைப்புக்கு எதிரான ஒருமுடிவு''[16] ''சட்டத்தின் ஆட்சிக்கு எதிராக எடுக்கப்பட்ட ஒருமுடிவு''[17] ''மக்களின் வாக்குரிமையை இரத்துச் செய்யும் ஒருமுடிவு''[18] ''அதிகாரப் பேராசையால் எடுக்கப்பட்ட ஒருமுடிவு''[19] ''மக்களிடம் கேட்காது பெரும்புள்ளிகள் ஒன்றுகூடி

---

10. ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தைக் கலைப்பதாக அறிவித்து வெளியிடப்பட்ட வர்த்மானப் பத்திரிகையைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதாக 2018.11.13ஆம் திகதி வெளியிடப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவு.

11. 2018.11.26ஆம் திகதி நேர்காணல், வெல்லவாய பிரதேசத்தைச் சேர்ந்த பெண்.

12. அதே

13. 2018.11.15ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த தொழிலாளி.

14. 2018.11.15ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர், 2018.11.25ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், மட்டக்களப்புப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்

**26 ஆம் திகதி ஜனாதிபதி மேற்கொண்ட நடவடிக்கை மக்களின் அபிலாசைகளுக்கான சாளரம் திறந்துவிடப்பட்டுள்ளதாகக் கருதும் அதேசமயம் இன்னும் சிலர் அந்த முடிவு மக்களின் அபிலாசைகள் மீதான கவனக் குறைவையே காட்டுகிறது எனத்தெரிவித்தனர். மட்டக்களப்புப் பிரதேசத்தில் நாம் சந்தித்த ஒருவர் "ஒக்டோபர் 26 ஆம் திகதி சம்பவம் தனக்கு 'முதல்வன்' திரைப்படம் நினைவுக்கு வருவதாக" தெரிவித்தார்.**

மாற்றங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன"[20] எனத்தெரிவித்தனர். 26 ஆம் திகதி சம்பவத்தை அனுமதிக்காதவர்கள் இதன் விளைவு "நாடு ஸ்திரத்தன்மையை இழக்கிறது"[21], "சர்வதேசத்தின் முன்னிலையில் நாட்டை பரிகாசத்திற்குரியதொன்றாக மாற்றி இருத்தல்"[22] என தங்களுடைய கருத்துக்களைப் பதிவு செய்தனர்.

26 ஆம் திகதி சம்பவத்தை அங்கீகரித்த பெரும்பாலானவர்கள் சிங்களவர்களாக இருந்ததோடு, அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் பொது அடிப்படை இதனால் நாடு பயணப்பட்டுக் கொண்டிருந்த திசையை (அவர்களின் கருத்துப்படி பாதகமாக)

15. 2018.11.15ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த சிறு வர்த்தகர்.

16. 2018.11.15ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயி.

17. 2018.11.08ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், மட்டக்களப்பு பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் பெண்.

18. 2018.11.26ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், மட்டக்களப்பு பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

19. 2018.11.11ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், மாத்தறை பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

20. 2018.11.06ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், பொலன்னறுவை பிரதேசத்தைச் சேர்ந்த முச்சக்கரவண்டி சாரதி.

21. 2018.11.11ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், புத்தளம் பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர்.

22. 2018.11.24ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், மட்டக்களப்பு பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

மாற்றியமைப்பதற்கு ஏதுவாக அமையும் என்பதாகும். இதனால் அவர்கள் 26 ஆம் திகதி செய்தி அறிந்ததும் சந்தோசக் கடலில் மூழ்கினர்.

*“சந்தோச மிகுதியால் பட்டாசுகளைத் தேடி ஓடினார்கள். நாங்கள் அன்னதானம் ஒன்றையும் ஏற்பாடு செய்தோம்.”*[23]

## ரணில் விக்கிரமசிங்கவும் மஹிந்த ராஜபக்சவும்

தொடக்கத்தில் ஆனந்தத்தில் மூழ்கி 26 ஆம் திகதி ஏற்பட்ட மாற்றத்தை தர்க்க ரீதியாக நியாயப்படுத்தும் போக்கினையும் எமக்குக் கிடைத்த பிரதிபலிப்புகள் மூலம் காணமுடிந்தது. பாணந்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர் ஒருவரின் தெளிவுபடுத்தலுக்கமைய, 2018 பெப்ரவரி மாதம் நடாத்தப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் பயணப்படும் பாதையை தெளிவாகவே நிராகரிக்கும் தமது முடிவை அறிவித்துவிட்டனர்.[24] இருப்பினும் தேசிய மட்ட ஆளுகையில் அம்முடிவு தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. 26 ஆம் திகதி அத்தவறு திருத்தப்பட்டது.[25] மற்றுமொரு சந்தர்ப்பத்தில் வெகுவிரைவில் கைச்சாத்திடப்படவிருந்த நாட்டுக்குப் பாதகமாக அமையும் பல்வேறு உடன்படிக்கைகளை தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன் இவ்வாறு செய்திருக்கலாமென தாம் கருதுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.[26]

---


23. 2018.11.01ஆம் திகதி நேர்காணல், குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்த முச்சக்கரவண்டிச் சாரதி.

24. 2018 பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி 337 உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக நடாத்தப்பட்டத்தப்பட்ட தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 34 நிறுவனங்களில் மாத்திரமே வெற்றி பெற்றது. மஹிந்த ராஜபக‘ தலைமையில் களமிறங்கிய ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன 231 நிறுவனங்களில் வெற்றிக்கொடி நாட்டியது.

25. 2018.11.02ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், பாணந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்.

26ஆம் திகதி சம்பவத்திற்கு சார்பாக கருத்துக்களைத் தெரிவித்த பெரும்பான்மையானோர் மாத்திரமன்றி அதற்கு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியோரில் பலரும் ரணில் விக்கிரமசிங்கவின் பிரதமர் பதவி பறிபோனதை ஆமோதித்தனர். அவரை அதிகாரத்திலிருந்து அகற்றியதற்கு சார்பாக 81 பேர் (57%) கருத்துத் தெரிவித்திருந்ததோடு, அதற்கு 29 பேர் மட்டுமே (20%) தமது மறுப்பைத் தெரிவித்திருந்தனர். எனினும் 33 பேர் (23%) அதுபற்றி உறுதிப்பட கருத்துத் தெரிவிப்பதை தவிர்த்துக்கொண்டனர்.

ஒக்டோபர் 26 ஆம் திகதி சம்பவம் தொடர்பில் அதிருப்தியை வெளியிட்ட பெரும்பாலானோர் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக காணப்பட்டபோதும் ரணில் விக்கிரமசிங்க தனது அதிகாரத்தை இழந்ததையிட்டு அவ்வாறான




**2018 ஒக்டோபர் 26 ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்ஹ பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பில் மக்கள் தெரிவித்த கருத்துக்கள்**

(வரைபடம் 02)

26. 2018.11.26ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், வெல்லவாய பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

ஒரு மாறுதலைக் காணமுடியவில்லை. அதாவது எல்லா இனக் குழுமங்களையும் சேர்ந்த பெரும்பாலான மக்கள் ரணில் விக்கிரமசிங்கவின் அதிகாரம் கைநழுவிப் போனதை சாதகமான முறையில் அர்த்தப்படுத்தியிருந்தனர். பொதுவாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு சிங்களவர்கள் அல்லாத மக்கள் மத்தியில் கூடுதலான வரவேற்பு உண்டு என்ற பொதுவான அங்கீகாரம் தொடர்ந்து செல்லுபடியாகுமா? என்ற விடயம் நாம் நேர்காணலுக்கு உட்படுத்திய நபர்களைப் பொறுத்தவரையில் உண்மையானது அல்ல என்பதை அவதானிக்க முடிந்தது. இருப்பினும் எம்மோடு கருத்துக்களைப் பரிமாறிக்கொண்ட சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் மிகுதியான விருப்பம் உண்டெனக் கருதுகின்றனர்.

> “*தமிழ் மக்களினதும் முஸ்லிம் மக்களினதும் வாக்குகளை நம்பியிருக்கும் ஒருவர்தான் ரணில்*”.[27]

> “*ரணிலின் பயணம் எமது மதத்திற்கும் கலாசாரத்திற்கும் முரணான ஒன்றாகவே காணப்பட்டது.*”[28]

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி தொடர்பில் பொதுமக்களின் அதிருப்தி அவருடைய பொருளாதார முகாமைத்துவத்தை மையப்படுத்தியதாகவே வெளிப்பட்டது. இதில் எந்தவோர் இன மற்றும் பூகோள ரீதியான சிறப்பியல்பினை இனங்காண முடியவில்லை.

> “*ரணில் தொழில் வாய்ப்புகளை வழங்கவில்லை. அவர் தனவந்தர்களுக்கு உரிய அந்தஸ்தை வழங்குவார்.*

---

27. 2018.11.25ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், மொனராகலைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

28. 2018.11.26ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், வெல்லவாய பிரதேசத்தைச் சேர்ந்த பெண்.

*சாமானியர்களுக்காக குரல் கொடுக்கும் அரசியல் ரணிலிடம் இல்லை.*"[29]

"*நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகளில் ரணிலின் இடையீடும் இயங்குநிலையும் குறைபாடுடையதாகவே காணப்பட்டது.*"[30]

"*நாட்டிலிருந்த வளங்களை விற்றார். பாடசாலை சீருடைக்குப் பதிலாக வவுச்சர் வழங்கினார். எமது கிராமத்திலுள்ள ஒருசிலருக்கு வவுச்சர் என்றால் என்னவென்று தெரியாது.*"[31]

"*ரணில் எம்மைப்போன்ற கீழ் வர்க்கத்திலுள்ள சாமானியர்கள் பற்றிச் சிந்திக்கவில்லை.*"[32]

"*அபிவிருத்தி மக்களுக்கு நன்மை பயப்பதாக இருத்தல் வேண்டும். ஆனால் இந்த அபிவிருத்தியில் அவ்வாறான எதுவும் இருக்கவில்லை.*"[33]

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மத்திய வங்கி பிணைமுறி விவகாரத்திற்குப் பொறுப்புக்கூற வேண்டுமென நாட்டின் பல பாகங்களிலிருந்தும் எம்மைச் சந்தித்தவர்களில் பெரும்பாலானோர் நம்பினர். அதேபோல் அவரின் பொருளாதார முகாமைத்துவம்

---

29. 2018.11.23ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், பானம பிரதேசத்தைச் சேர்ந்த பெண்.

30. 2018.11.24ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், மட்டக்களப்புப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

31. 2018.11.19ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், வலஸ்முல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

32. 2018.11.01ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்த லொத்தர் சீட்டு விற்பனையாளர் (பெண்)

33. 2018.11.02ஆம் திகதி நேர்காணல், அம்பாந்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்.




பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சி அந்த முடிவினை ஏற்றுக்கொள்ளாது அலரிமாளிகையில் தங்கியிருந்தவாறு மக்களைச் சந்தித்த காட்சி.

மூலம் : https://timesofoman.com/article/66782

பலவீனமானது என்பதற்கு பெரும்பாலும் பிணைமுறிச் சம்பவம் உதாரணமாகக் காட்டப்பட்டது.[34] எதிர்காலத்தில் ஏதேனும் ஓர் அரசாங்கம் முன்னுரிமை அளிக்க வேண்டிய விடயம் பற்றி வினவியபோது எம்மிடம் கருத்துத் தெரிவித்த 69.2%மானோர் பொருளாதாரத்திற்கு முன்னுரிமையளிக்க வேண்டுமென தெரிவித்தனர். ரணில் விக்கிரமசிங்க பதவி நீக்கப்பட்டதை அனுமதித்த பெரும்பாலானோர் பொருளாதார முகாமைத்துவத்தில் அவர் வெற்றிப்பெறவில்லையெனக் கூறினர்.

இனரீதியாக அல்லது பூகோள வேறுபாடின்றி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் பொருளாதார முகாமைத்துவம் தொடர்பில் மக்கள் அதிருப்தியைத்

34. பிணைமுறியென்றால் என்ன என்பதை அறியாதவர்கள்கூட இந்தக் குற்றச்சாட்டை முன்வைப்பதிலிருந்து அது எந்தளவுக்கு ஆழமாக சமூகத்தில் பேசப்படும் பொருளாக மாறியிருக்கின்றது என்பதை வெளிப்படுத்துகிறது.

தெரிவித்த அதேசமயம் மஹிந்த ராஜபக்சவின் அரசியல் கொள்கை தொடர்பில் தமது கருத்துக்களைப் பதிவு செய்த நபர்களில் பெரும்பாலானோர் சிங்களச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாகவே காணப்பட்டனர். நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட 143 பேரில் 48 பேர் இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர் மற்றும் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்களாவர். அதில் 37 பேர் (77.08%) மஹிந்த ராஜபக்ச மீண்டும் ஒருமுறை பிரதமராக நியமிக்கப்பட்டமை தொடர்பில் தமது எதிர்ப்பைத் தெரிவித்தமைக்குக் காரணம், அவர் ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அரசியல் கொள்கைகளேயொழிய, அவரால் நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் அல்ல.

"*தமிழ் மக்கள் மட்டுமல்ல, நாட்டிலுள்ள ஒட்டுமொத்த நாட்டு மக்களும் ஒன்றாக இணைந்து கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டவர்தான் அவர். அதேபோல் குற்றச்செயல்களுடன் தொடர்புபட்ட ஒருவரை பிரதமராக நியமித்தமை தவறானது.*"[35]

"*மஹிந்தவுக்கு இனி ஒருபோதும் அதிகாரத்தை அளிக்க வேண்டிய அவசியமில்லை. அவர் தமிழ் மக்களுக்குச் செய்த அட்டூழியங்களை எம்மால் ஒருநாளும் மறக்க முடியாது.*"[36]

"*மஹிந்த அதிகாரத்திற்கு வந்தால் அது முஸ்லிம் மக்களுக்கும் பொதுவாக நாட்டுக்கும் ஆபத்து.*"[37]


---

35. 2018.11.20ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், மட்டக்களப்பு பிரதேசவாசி.
36. 2018.11.15ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், யாழ்ப்பாணப் பிரதேசவாசி.

ஒருசில சந்தர்ப்பங்களில் அரசியல் மேடைகளிலும் கலந்துரையாடல்களிலும் கடந்த காலத்தில் முன்வைக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தியானது ஏனைய அரசியல் பிரச்சினைகளை இரண்டாம் நிலைக்கு அல்லது முக்கியத்துவமற்ற நிலைக்கு மாற்றிவிடுகிறது எனும் தர்க்கம் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரையில் இன்றும் தவறானது என்பதை அவர்களின் பிரதிபலிப்புகளைக் கொண்டு முடிவுக்கு வரலாம்.

நேர்காணலுக்கு உட்படுத்திய 143 பேரில் 63பேர் (44%) மஹிந்த ராஜபக்ச மீண்டும் பிரதமர் பதவிக்கு வந்ததை சாதகமான விடயமாகப் பார்க்கின்ற அதேநேரம், 62பேர் (43%) அதற்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். 18 பேர் (13%) எந்தவொரு பிரதிபலிப்பையும் செய்யவில்லை.

## அரசியல் நாகரிகம்




**2018 ஒக்டோபர் 26ஆம் திகதி மஹிந்த ராஜபக்ச புதிய பிரதமர் பதவிக்கு நியமிக்கப்பட்டமை தொடர்பாக மக்கள் தெரிவித்த கருத்துக்கள்.**

(வரைபடம் 03)

37. 2018.11.23ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், காத்தான்குடிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

ஒக்ரோபர் 26 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ச மீண்டும் பிரதமராக நியமிக்கப்பட்டமை தொடர்பில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் நடாத்தப்பட்ட நேர்காணல்களில் கலந்து கொண்ட பெரும்பாலானோரின் கருத்துப்படி அது மிகவும் நல்ல ஒரு விடயமாகவே பார்க்கப்பட்டது. குறிப்பாக அரசியல் மாற்றம் நிகழ்ந்த முதல் 10 நாட்களுக்குள் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் இருந்துள்ளனர் என்பதை எம்மால் அவதானிக்க முடிந்தது.

> "*மஹிந்த ராஜபக்ச ஐயாவை எல்லோரும் விரும்புகின்றனர். வேறு என்னதான் வேண்டும். ரணில் தோல்வியை ஏற்றுக்கொண்டு பதவியை கைவிட வேண்டுமே தவிர வேறு ஒன்றையும் செய்வதற்கில்லை.*"[38]

> "*பாராளுமன்றில் எதுநடந்தாலும் வெற்றி பெறுபவர் மஹிந்த ஐயாவாகத்தான் இருக்க வேண்டும். அவர் வெற்றி பெறுவதும் உறுதி. நீண்ட காலம் அதிகாரத்தில் இருப்பதும் உறுதி.*"[39]

எவ்வாறாயினும் கால ஓட்டத்துடன் நீதிமன்றச் செயற்பாடுகள், பாராளுமன்றத்தில் தோன்றிய பல்வேறு நெருக்கடிகள் போன்ற தொடர் நிகழ்வுகளை அவதானித்த மக்கள் மஹிந்த ராஜபக்ச அதிகாரத்திற்கு வந்தமை தொடர்பில் மிகவும் கூர்மையாகத் தமது கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர்.

> "*மஹிந்த ஐயா இவ்வாறு பதவிக்கு வராமல் தேர்தல் ஒன்றின் மூலம் பிரதமராக வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.*"[40]

---

38. 2018.11.01ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்த முச்சக்கரவண்டிச் சாரதி.

39. 2018.11.02ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்த பழ வியாபாரி.

"*மஹிந்த ஐயா அதிகாரத்திற்கு வந்ததை விரும்புகிறேன். ஆனால் இது நாட்டை எதேச்சாதிகாரத்தை நோக்கி கொண்டு செல்லும் ஒரு நடவடிக்கை. ஏனெனில் மஹிந்த பாராளுமன்றின் பெரும்பான்மையை ஏற்றுக்கொள்ளவில்லையே.*"[41]

இருவாரங்கள் கழிந்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் மஹிந்த ராஜபக்சவின் ஆதரவாளர்களும் பின்வருமாறு தமது கருத்துக்களைப் பதிவு செய்தனர்.

"*மஹிந்த ஐயா பறித்த கனியை சாப்பிட்டே தீருவார். தோல்வியால் துவண்டு கிடந்த அவர் அதைப் பெற்றுக்கொண்டது மீண்டும் தாரை வார்ப்பதற்கல்ல. அவர் எப்படியும் ஒரு சண்டியன்.*"[42]

சிங்கள மக்களில் பெரும்பாலானோர் 26 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட மாற்றம் மற்றும் மஹிந்த ராஜபக்ச பிரதமர் பதவிக்கு வந்ததை வரவேற்றாலும், அந்நடவடிக்கையிலுள்ள அரசியல் நாகரிகம் அவர்களுக்கு முக்கியமான ஒன்றாக இருந்துள்ளது என்ற விடயம் எம்மிடம் தெரிவிக்கப்பட்ட மாறுபட்ட கருத்துக்களுடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் செயற்பாடு தொடர்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களில் அரசியல் நாகரிகம் பற்றிய


---

40. 2018.11.12ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், காலி பிரதேசத்தைச் சேர்ந்த பெண்.

41. 2018.11.11ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், மாத்தறை பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

42. 2018.11.23ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், புத்தளம் பிரதேசத்தைச் சேர்ந்த தனியார் பாதுகாப்ப உத்தியோகத்தர்.

கருத்துக்கள் மிகவும் தீவிரமாக இடம்பெற்றிருந்ததை காணமுடிந்தது. நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட 143 பேரில் 68 பேர் (48%) ஒக்டோபர் 26 ஆம் திகதி ஜனாதிபதியால் மஹிந்த ராஜபக்சவை பிரதமராக நியமித்தமை மற்றும் அதன் பின்னர் அவர் மேற்கொண்ட முன்னெடுப்புகளுடன் உடன்படவில்லை. 51 பேர் (36%) அவருடைய செயற்பாடுகளை அங்கீகரித்தனர். 05 பேர் ஜனாதிபதியின் செயற்பாட்டை அங்கீகரித்த போதும் அதிலுள்ள கண்ணியம் தொடர்பில் சந்தேகம் எழுவதாகத் தெரிவித்தனர். 19 பேர் (13%) எத்தகைய பிரதிபலிப்பையும் செய்யவில்லை.




**2018 ஒக்டோபர் 26 ஆம் திகதி மற்றும் அதன்பின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் தெரிவித்த கருத்துக்கள்**

(வரைபடம் 04)

பொதுவாக அனைத்துப் பகுதிகளிலும் ஜனாதிபதியின் முடிவு குறித்து தமது அதிருப்தியைத் தெரிவித்த மக்கள் 2015 இல் அவர் மக்கள் முன் பேசிய விடயங்களுக்கும் அவரின் தற்போதைய செயற்பாடுகளுக்குமிடையில் காணப்படுகின்ற வித்தியாசத்தை அதற்கான அடிப்படையாகக் கொண்டிருந்தனர். அது அவர்

மக்களோடு செய்துகொண்ட உடன்பாட்டை மீறும் செயல் எனவும் அவ்வாறான ஒன்றைச் செய்வதாயின் உடன்பாட்டின் மற்றைய தரப்பான மக்களிடம் அவர் பேசியிருக்க வேண்டும் என்பதும் பலரின் கருத்தாக இருந்தது. அவர்களின் கருத்துப்படி இதுவொரு நெறிகெட்ட செயல். எம்மிடம் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்ட பானம பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர், அவர் மக்களோடு ஏற்படுத்திக்கொண்ட உடன்பாட்டை மீறி கொலை சதித்திட்டம், மேற்கத்தைய சார்பு மற்றும் நாட்டைக் காட்டிக்கொடுத்தல் போன்ற குற்றச்சாட்டுகளை ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக முன்வைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனக்குறிப்பிட்டார். அவரின் கருத்துப்படி ஜனாதிபதி இக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் 26 ஆம் திகதிக்கு முன்னர் மக்களோடு பேசியிருக்க வேண்டும். 26 ஆம் திகதிக்குப் பின்னரல்ல. ஏனென்றால் அவருக்கும் மக்களுக்குமிடையில் உண்மையான உடன்பாடு இருந்ததே தவிர, ரணில் விக்கிரமசிங்கவுடன் அல்ல.[43] நேர்கண்ட பலர், ஜனாதிபதி தொடர்பில் “நிறைவேற்று அதிகாரங்களைக் குறைத்து ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதாகக் கூறி அதிகாரத்திற்கு வந்த ஒருவர்”[44] “அதிகார மோகத்தால் சட்டத்திலுள்ள பலவீனங்களைப் பயன்படுத்தி”[45] “அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்து, மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையைத் தட்டிப்பறித்து சர்வாதிகாரியாக நடந்துகொள்வதாக”[46] குற்றச்சாட்டை முன்வைத்திருந்தனர்.

---

43. 2018.11.23ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், பானம பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவர்.

44. 2018.11.15ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், யாழ்ப்பாணம் பிரதேசத்தைச் சேர்ந்த வியாபாரி ஒருவர்.

45. 018.11.23ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், மட்டக்களப்பு பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர்.

46. 2018.11.27ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், பதுளை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர்.

இது ஜனாதிபதியின் செயற்பாடுகளின் நம்பகத்தன்மை தொடர்பில் மக்கள் மத்தியில் சந்தேகங்கள் வலுக்கக் காரணமானது. அவர்கள் அதை வெளிக்காட்டும் முகமாக "இதுவும் 2015 இல் அப்பத்தைச் சாப்பிட்டபின் எடுத்த முடிவுக்கு ஒப்பானது"[47], "ஒரு பெண்ணுடன் குடித்தனம் செய்து இன்னொரு பெண்ணைத் தேடிச் சென்றது போலாகும்"[48] போன்ற சொல்லாடல்களைப் பயன்படுத்தினர்.

**எந்தவொரு நிலையிலும் பாராளுமன்றத்தின் அதிகாரத்தைப் புறக்கணித்தல் நாட்டை இராணுவ ஆட்சிக்கு கொண்டு சென்றுவிடும். நியமனமொன்றின் சட்ட வலிமையை பாராளுமன்றத்தால் மட்டுமே உறுதிசெய்ய முடியும். வேறு வழியில்லை.**

அநேகமானோர் கொலை சதித்திட்டம், ரணில் விக்கிரமசிங்கவின் தவறான பொருளாதார முடிவுகள், மத்திய வங்கி பிணைமுறி விவகாரம், அத்தோடு நாட்டைப் பிளவுபடுத்தும் அரசியல் அமைப்பு போன்றவை ஜனாதிபதி இவ்வாறான ஒரு முடிவை எடுப்பதில் தாக்கம் செலுத்திய நியாயமான காரணங்கள் என்பதை ஏற்றுக்கொண்ட பலரும் அம்முடிவு நடைமுறைப்படுத்தப்பட்டவிதம் அநாகரிகமானது எனக் குறிப்பிட்டனர்.

அவர்களில் பெரும்பாலானோர் ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் செயற்பாட்டை நிராகரிக்கும் நிலையில் இருந்ததால் நாகரிகத்தை அடிப்படையாக வைத்து ரணில் விக்கிரமசிங்க தொடர்பான எந்தவொரு கருத்தையும் தெரிவிக்கவில்லை. இவர்களின்

---

47. 2018.11.06ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், பொலன்னறுவை பிரதேசத்தைச் சேர்ந்த முச்சக்கரவண்டிச் சாரதி ஒருவர்.

48. 2018.11.11ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், மாத்தறை பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவர்.



2018.10.26 ஆம் திகதி புதிய பிரதமராக நியமிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்சவுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மக்கள் முன் தோன்றிய காட்சி.

மூலம் : **https://facebook.com**

கூற்றுப்படி 2015 இல் தமக்கு மைத்திரிபால சிறிசேனவுடன் உடன்பாடு உள்ளதே தவிர, ரணில் விக்கிரமசிங்கவுடன் அல்ல. ஆகவே ஜனாதிபதி அந்த உடன்பாட்டை மீறிவிட்டார்.

குறிப்பாக வடக்கு தமிழ் மக்கள் இத்தொடர் சம்பவங்களை சந்தேகத்துடன் பார்த்திருப்பதானது ஆய்வில் கண்டறியப்பட்ட மற்றுமொரு சிறப்பம்சமாகும். ஒரு சிலருக்கு "இதன் பின்னணியில் சர்வதேச அழுத்தம் / சூழ்ச்சி"[49] இருந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் நேர்காணலுக்கு உட்படுத்திய வர்த்தகர் ஒருவர், 26 ஆம் திகதி ஜனாதிபதி மேற்கொண்ட நடவடிக்கையை "அதை அண்மித்த

49. 2018.11.15ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர், 2018.11.17ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர், 2018.11.07ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல்,

காலத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் ஏற்பட்ட பிளவையடுத்து உருவான புதிய அரசியல் நிலைமை தொடர்பில் தெரிவித்த ஒரு பிரதிபலிப்பாக"[50] அவதானித்துள்ளார்.

ஒருசிலர், 26 ஆம் திகதி ஜனாதிபதி மேற்கொண்ட நடவடிக்கை மக்களின் அபிலாசைகளுக்கான சாளரம் திறந்து விடப்பட்டுள்ளதாகக் கருதும் அதேசமயம் மற்றும் சிலர் அம்முடிவு மக்களின் அபிலாசைகள் மீதான கவனக்குறைவையே காட்டுகிறது எனத் தெரிவித்தனர். மட்டக்களப்புப் பிரதேசத்தில் நாம் சந்தித்த ஒருவர் "ஒக்டோபர் 26ஆம் திகதி சம்பவம் தனக்கு 'முதல்வன்'[51] திரைப்படத்தை நினைவுபடுத்தியதாக"[52] தெரிவித்தார்.

> "*மைத்திரி தன்னைப் பற்றித்தான் சிந்திக்கின்றார். எவரும் சாமானியரைப் பற்றி சிந்திப்பதில்லை.*"[53]

> "*மக்கள் அழுத்தத்தோடு இருந்தார்கள். இருந்தபோதிலும் ஜனாதிபதியின் முடிவுக்கு கொலை சதித்திட்டம் அடிப்படையாக அமைந்தது. ஆகவே அவர் மக்களைப் பற்றிச் சிந்தித்து இந்த முடிவை எடுத்தார் என்று கூறமுடியாது.*"[54]

---

50. 2018.11.17ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த சிறு வர்த்தகர் ஒருவர்.

51. 'முதல்வன்' இது 1999ஆம் ஆண்டு இந்தியாவில் திரையிடப்பட்ட இயக்குனர் எஸ். சங்கர் இயக்கிய ஒரு தமிழ்த் திரைப்படம். ஊடகவியலாளர் ஒருவர் தமிழ் நாட்டில் ஒரு நாள் முதல்வராகப் பதவி வகிப்பதும் அதன் பின்னர் அவர் எதிர்நோக்கும் கெடுபிடிகளும் இத்திரைப்படத்தின் கதை அம்சமாக உள்ளது.

52. 2018.11.08ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், மட்டக்களப்பு பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர்.

53. 2018.11.21ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், பண்டாரவளை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர்.

54. 2018.11.01ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், கண்டிப் பிரதேசத்தில் வியாபார நிலையமொன்றில் தொழில்புரியும் ஒருவர்.

## பிரதிநிதித்துவ ஜனநாயகம் - பாராளுமன்றத்தின் மீயுயர் தன்மை – மக்களின் இறைமை தொடர்பில் மக்களின் கருத்துக்கள்.

நாம் நடாத்திய நேர்காணல்களில் பிரதிநிதித்துவ ஜனநாயகம், பாராளுமன்றத்தின் மீயுயர் தன்மை மற்றும் மக்களின் இறைமை தொடர்பில் மிகவும் தர்க்க ரீதியானதும் மதிநுட்பம் சார்ந்துமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. 26 ஆம் திகதி சம்பவத்தின் பின்னரான முதல் வாரத்தில் மக்களின் கருத்துக்கள் அரசியல் அதிகார மாற்றம் தொடர்பில் தாம் கொண்டுள்ள விருப்பு வெறுப்பு மற்றும் புதியவொரு சூழ்நிலைமையால் உருவாக்கப்படவுள்ள எதிர்கால சமூக பொருளாதார மற்றும் அரசியல் நிலைமை தொடர்பிலான சாதகமான அல்லது பாதகமான எதிர்பார்ப்புகள் தொடர்பில் மையப்பட்டிருந்தமையை முக்கியமாக அவதானிக்க முடிந்தது. 26 ஆம் திகதி சம்பவத்தையடுத்து வந்த 10 நாட்களுக்குள் ஆட்சிபீடத்திற்கு வந்த புதிய அரசாங்கம் வழமைப்போல் ஆட்சியை நகர்த்திச் செல்லுமென்பது மக்களின் எதிர்பார்ப்பாக இருந்தது. இதனை சாதகமான ஒன்றாகக் கருதிய குறிப்பிட்ட சிலர் புதிய அரசாங்கம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டிய தேவை அல்லது இச்செயற்பாட்டின் சட்ட வலிமை பற்றி ஆய்ந்தறியத் தவறியிருந்தனர்.

> "*பாராளுமன்றத்தைக் கூட்டினாலும் சரி, கூட்டாமல் விட்டாலும் சரி மஹிந்த ஐயாவுக்குத்தான் பெரும்பான்மை. அதேபோல் பாராளுமன்றம் வேறு எதைச் சொன்னாலும் ஜனாதிபதி அதையும் கவனித்துக்கொள்வார்.*"[55]

55. 2018.11.05ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், அநுராதபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த வாடிவீட்டு உரிமையாளர்

*"பாராளுமன்றம் ஒரு வெற்றுவேட்டு. எது நடக்க வேண்டுமோ அது தீர்மானிக்கப்பட்டு விட்டது. எந்த முடிவுக்கு வந்தாலும் இந்த அரசாங்கம்தான் அரசாங்கம்."*[56]

*"பாராளுமன்றத்திலும் சரி, வேறு வகையிலும் சரி நல்லதுதான் நடந்துள்ளது."*[57]

*"பாராளுமன்றத்தின் முடிவை யார் ஏற்றுக்கொண்டாலும் சரி, ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சரி, எங்கள் ஆதரவு புதிய அரசாங்கத்துக்குத்தான்."*[58]



சபாநாயகரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் சபாமண்டபத்தில் நடந்துகொண்ட விதம்.
மூலம் : **https://www.dw.com/en/**

56. 2018.11.04ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், பொலன்னறுவை பிரதேசத்தைச் சேர்ந்த பஸ் நடத்துநர் ஒருவர்.

57. 2018.11.03ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், தலவத்துகொட பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர்.

58. 2018.11.02ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர்.

நவம்பர் மாதம் 01 ஆம் திகதி நாம் குருநாகல் பிரதேசத்தில் நடாத்திய நேர்காணலில் கலந்துகொண்ட ஒருவர், "*பெரும்பான்மை இல்லாமல் எத்தனையோ அரசாங்கங்கள் இருந்திருக்கின்றன. நிதி மற்றும் ஏனைய சட்டங்களை நிறைவேற்றுவதற்குத்தான் பெரும்பான்மை அவசியம். அதுவும் இல்லாவிட்டால் பெரும்பான்மை தேவையில்லை.*"[59] எனத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் முதல் 10 நாட்கள் கழிந்த பின்னர் இவர்கள் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவங்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணைகள், நீதிமன்ற நடவடிக்கைகள், கட்சித் தாவல்கள் மற்றும் அரசியல்வாதிகளின் பல்வேறுபட்ட நடத்தைகள் தொடர்பில் பகுத்தறியும் கண்ணோட்டத்தில் இப்பிரச்சினையை அணுகத் தலைப்பட்டனர். சுமார் ஒருமாத காலத்தின் பின்னர் உருவாகிவரும் அரசியல் ஸ்திரமற்ற நிலை தொடர்பில் மக்கள் தீவிரமாகச் சிந்திப்பதை அவதானிக்க முடிந்தது. அதாவது, பாராளுமன்றத்தை ஒரு பொருட்டாகக் கொள்ளாது அல்லது அதைத் தவிர்த்து அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வது பற்றி சிந்திப்பதற்குப் பதிலாக பாராளுமன்றத்தினூடாக மக்களின் அபிலாசைகள் எவ்வாறு பிரதிபலிக்கப்பட்ட வேண்டும் என்பது பற்றி கூடுதல் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. பொலன்னறுவைப் பிரதேசத்தைச் சேர்ந்த வெற்றிலைக்கூறு விற்பனை செய்யும் பெண்ணொருவர் கருத்துத் தெரிவித்தபோது, "பாராளுமன்றம் எம்மைப் பிரதிநிதித்துவப்படுத்துமானால் அங்கு எமது விருப்பத்திற்கு மாறான முடிவொன்றை எடுக்க முடியாது"[60] என்றார்.

---

59. 2018.11.01ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர்.

60. 2018.11.10ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், பொலன்னறுவைப் பிரதேசத்தைச் சேர்ந்த சிறு வியாபாரி (பெண்)

மேலோட்டமாகப் பார்க்கும்போது அவர் தெரிவித்த கருத்து எளிமையானதாக இருந்தாலும் பாராளுமன்றம் அதன் சட்ட வலிமையை, அதாவது பொதுமக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதை உறுதிப்படுத்த வேண்டுமாயின், பாராளுமன்றத்திற்கு பொதுமக்களின் கருத்திலும் மாறுபட்ட கருத்தொன்றைக் கொண்டிருக்க முடியாது எனும் விடயம் அக்கூற்றினூடாக வெளிப்பட்டுள்ளது. மறுபுறத்தில் "*மஹிந்த ராஜபக்சவின் அரசாங்கம் மக்களின் விருப்பமாக இருந்தால் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்றத்தில் அதற்கு எதிரான முடிவொன்றை நோக்கி நகரவும் வாய்ப்பு இல்லை.*"[61] பாராளுமன்ற உறுப்பினர்களின் கட்சித்தாவும் படலம் தொடர்ச்சியாக அரங்கேறியதால் நிலைமை மேலும் சிக்கலானது. நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட 143 பேரில் ஒருசிலர் தவிர்ந்த ஏனைய அனைவரும் கட்சித்தாவல் தொடர்பில் தமது எதிர்ப்பை வெளியிட்டனர். அவர்களின் கருத்துப்படி, "*தமது பிரதிநிதிகள் கட்சி தாவுவதாயின் அவர்கள் தொடர்ந்தும் தம்மை பிரதிநிதித்துவப்- படுத்தமாட்டார்கள். அவ்வாறான ஒரு நிலைமையில் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனமாக பாராளுமன்றைக் கருத முடியாது.*"[62] அவ்வாறான நிலையில் "*மஹிந்த ராஜபக்ச அல்லது ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றில் நிருபிக்கும் பெரும்பான்மையை ஏற்றுக்கொள்ள முடியாது.*"[63] இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த மற்றுமொருவர், "*2015 பொதுத்தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் தேசியப் பட்டியல் மூலம் மீண்டும் பாராளுமன்றத்திற்கு தெரிவு*

---

61. 2018.11.11ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், மாத்தறைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர்.

62. 2018.11.12ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், அம்பாறை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர்.

63. 2018.11.21ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், பண்டாரவளை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர்.

*செய்யப்பட்டுள்ளதால் பாராளுமன்றம் மக்களை உரிய முறையில் பிரதிநிதித்துவம் செய்கிறது எனக்கருத முடியாது.''*[64] என்றார். இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த அனைவரும் பாராளுமன்றம் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யுமாயின் அல்லது அது அவ்வாறு அல்லாவிடின், அவ்வாறான ஒரு பாராளுமன்றத்திற்கு மக்களின் இறைமையைப் பிரதிநிதித்துவம் செய்வதற்குள்ள சட்ட வலிமை யாதென்ற கேள்வியை முன்வைத்தனர்.

> ''*இப்பாராளுமன்றில் இருப்பவர்கள் பணத்திற்காக கட்சியையே மாற்றக்கூடியவர்கள். அதிகாரத்தின் அத்திவாரம் பொதுமக்களாயின் நாம் திரிபுபடுத்தப்பட்ட இப்பாராளுமன்றை ஏற்றுக்கொள்ள வேண்டுமா?''*[65]

> ''*பாராளுமன்றில் நீதி இல்லையென்பதைக் காணமுடிந்தது. ஆகவே அதற்குரிய கௌரவமும் அதிகாரமும் இனிமேலும் இல்லை.''*[66]

> ''*பாராளுமன்றம் மேலாண்மை கொண்டதென அவர்களே கூறுகின்றனர். ஆனால் அவர்களேதான் அதன் கண்ணியத்தையும் சீரழிக்கின்றனர். பாராளுமன்றத்தில் எடுக்கப்படும் முடிவு மக்களின் அபிப்பிராயத்திற்கு எதிரான ஒன்றாக இருந்தாலும்கூட அதை அரசியல் கட்சிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் மக்கள் அதை ஏற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால்*

---


64. 2018.11.25ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், புத்தளம் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர்.

65. 2018.11.12ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், காலி பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர்.

66. 2018.11.26ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், மட்டக்களப்பு பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர்.

*தம்மை பிரதிநிதித்துவப்படுத்தாத பாராளுமன்றத்தை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.”*[67]

இவ்வாறான ஒரு சூழ்நிலைமையில் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட 143 பேரில் 61 பேர் (42%) இச்சிக்கலான நிலைமைக்குப் பாராளுமன்றத்திலேயே தீர்வுண்டு எனவும், 48 பேர் (34%) அதற்குத் தீர்வுகாண பாராளுமன்றத்தால் முடியாது எனவும் (34 பேர் அதாவது 24%மானோர் எந்தவொரு பதிலையும் அளிக்கவில்லை என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.)




**அரசியல் மற்றும் அரசியலமைப்பு நெருக்கடி குறித்து பாராளுமன்றத்தின் வகிபங்கு தொடர்பில் மக்கள் தெரிவித்த கருத்துக்கள்**

(வரைபடம் 05)

பாராளுமன்றம் மூலமாகவே இப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டுமெனத் தெரிவித்தவர்கள் எந்தவொரு சூழ்நிலைமையிலும் ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனமொன்றை கைவிடவோ/தவிர்க்கவோ முடியாது என்பதை

67. 2018.11.21ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், கண்டி பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர்.

வலியுறுத்தியிருந்தனர். அவர்களின் கருத்துப்படி "*எந்தவொரு கட்டத்திலும் பாராளுமன்றின் அதிகாரத்தை நிராகரிப்பது இராணுவ அரசாங்கம் ஒன்றுக்கு வித்திடும்.*"[68] நியமனமொன்றின் சட்டபூர்வத் தன்மையை பாராளுமன்றத்தால் மட்டுமே உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். அதைத் தவிர்த்து வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை.

> "*யார் ஆட்சிக்கு வந்தாலும் சட்டரீதியானதாக இருக்க வேண்டும்.*"[69]

> "*பாராளுமன்றத்திற்கு வெளியில் எடுக்கப்படும் முடிவுகள் நாட்டை இராணுவமயப்படுத்துவதற்கான பாதையை வகுத்துக் கொடுத்துவிடும்.*"[70]

> "*முழு உலகத்தின் கவனமும் பாராளுமன்றத்தை நோக்கித் திரும்பியுள்ளதால் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் மிகவும் முக்கியமானது.*"[71]

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த சிலர் சட்டத்தை சவாலுக்குட்படுத்தும் ஒரு செயலை செய்த பின்னர் அது தொடர்பில் பாராளுமன்றத்தின் பிரதிபலிப்பிலுள்ள சட்ட வலிமை குறித்துக் கேள்வியெழுப்புவது நியாயமற்றது எனத் தெரிவித்தனர். அவர்களின் கருத்துப்படி சட்டத் தவறினால் உருவான இத்திரிசங்கு நிலைக்கு மீண்டும் சட்டத்திற்கு அமைவாக நடந்துகொள்வதன் மூலமாகவே தீர்வு காணமுடியும்.

---

68. 2018.11.11ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், காலி பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர்.

69. 2018.11.26ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், ரத்துபஸ்வல பிரதேசத்தைச் சேர்ந்த சிறு வியாபாரி ஒருவர்.

70. 2018.11.15ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், யாழ்ப்பாணம் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர்.

71. 2018.11.14ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், மாத்தறை பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவர்.

"பாராளுமன்றத்தின் விருப்பத்திற்குப் பதிலாக இங்கே அமுலுக்கு வந்திருப்பது இரண்டு பேரின் முடிவு. கடந்த வருடத்தில் 10 தடவைகள் மட்டுமே[72] பாராளுமன்றத்திற்கு வந்த ஒருவர்[73] இன்று பிரதமராகியுள்ளார்.

வெல்லவாய பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் எம்மிடம் கருத்துத் தெரிவிக்கையில், "*எதுவாக இருந்தாலும் அதற்கான தீர்வு அரசியலமைப்புக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது என்ன செய்தாலும் அவர் அதனை அரசியலமைப்புக்கு உட்பட்டே செய்தார்.*"[74] என்றார். பெரும்பாலானவர்கள் இவ்வாறான ஒரு நிலைப்பாட்டைக் கொண்டிருந்தபோதும் ஒருசிலர் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையினுள் தீர்வுகாண முடியாதளவுக்கு இப்பிரச்சினை வளர்ந்துவிட்டதாகத் தெரிவித்தனர். அநுராதபுரத்தில் நாம் சந்தித்த நபரொருவர் கருத்துத் தெரிவிக்கையில், "*நாட்டுக்கு சாபக்கேடு வந்த பின்னர் அரசியலமைப்பு எதற்கு?*"[75] எனக் கூறினார். இரத்தினபுரிப் பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் இதே கருத்தினை மிகவும் அடக்கமான முறையில் தெரிவித்திருந்ததையும் குறிப்பிட வேண்டும். அதன்படி, இறுதி முடிவு சட்டத்திற்கு அமைவானதாக இருக்க வேண்டும். அதேநேரம் அது மக்களின் விருப்பத்தையும் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும். அதனடிப்படையில் சட்டம்

---

72. அறிக்கைகளின்படி இந்த ஆண்டில் பாராளுமன்றம் கூடிய 96 நாட்களில் 22 நாட்கள் (10 நாட்கள் அல்ல) பாராளுமன்ற அமர்வுகளில் மஹிந்த ராஜபக்‘ கலந்துகொண்டுள்ளார்.(https//parliament.lk/enmembers_ofpaliament/attendence)

73. 2018.11.15ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், யாழ்ப்பாணம் பிரதேசத்தைச் சேர்ந்த தொழிலாளி ஒருவர்.

74. 2018.11.26ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், வெல்லவாய பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவர்.

75. 2018.11.26ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், அநுராதபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர்.

மக்களுக்கு சேவை செய்கிறது. ஏதோ ஒருவகையில் சட்டத்தில் குறைபாடுகள் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அதற்குள்ளேயே அதற்கான தீர்வைத் தேடும் முயற்சியால் சட்டத்தின் தோல்வி/ வரையறை வெளிக்கொண்டு வரப்படுகிறது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் சட்டத்தால் பிரதானமாக எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களைக் கவனத்திற்கொண்டு அக்குறிக்கோள்களுக்கு ஏற்றவகையில் சட்டத் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.[76]

கொழும்பில் நாம் சந்தித்த பல்கலைக்கழக மாணவியொருவர் கருத்துத் தெரிவிக்கையில், 'ஒக்டோபர் 26 ஆம் திகதி சட்டம் மற்றும் செயல் நடைமுறை சார்ந்த ஒருதவறு நடந்துள்ளது எனவும், பாராளுமன்றம் அதை அங்கீகரித்தாலும் அது சரியாகாது.''[77] எனக் குறிப்பிட்டார். பானம பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் எம்மிடம் கருத்துத் தெரிவித்தபோது, இச்சிக்கல் அரசியலமைப்பினூடாக தீர்வுகாண முடியாதளவுக்கு தீவிரமடைந்துள்ளதாகக் கூறினார். அவரது கருத்துப்படி மீண்டும் மீண்டும் அரசியலமைப்புக்கு உட்பட்டு அதற்கு தீர்வு தேடும் முயற்சி தொடர்வதால் மீண்டும் மீண்டும் அரசியலமைப்புக்கு உள்ள மதிப்பு கொச்சைப்படுத்தப்படுகிறது.[78] மக்கள் இவ்வாறான கருத்துக்களைத் தெரிவிப்பதினூடாக அவர்கள் அரசியல் களநிலைமைகள் பற்றி எந்தளவுக்கு ஆழமாகச் சிந்திக்கின்றனர், அதேபோல் அவர்களின் பகுப்பாய்வுகள் எந்தளவுக்கு கூர்மையாக இருந்துள்ளன போன்ற விடயங்கள் எமக்கு வியப்பை ஏற்படுத்தியது.

---

76. 2018.11.24ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர்.

77. 2018.11.16ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவி ஒருவர்.

78. 2018.11.23ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், பானம பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர்.

தற்போதைய திரிசங்கு நிலைக்கு சகல அதிகாரங்களினதும் அடிநாதம் அதாவது, இறைமை அதிகாரத்தைக் கொண்டுள்ள மக்களை நாடுவதன் மூலமே இதற்குத் தீர்வு கிடைக்குமென ஒருசிலர் தெரிவித்தனர். அதன்படி பொதுத்தேர்தல் ஒன்று நடாத்தப்பட்டு மக்களின் விருப்பங்கள் பிரதிபலிக்கப்படும் புதிய பாராளுமன்றம் ஒன்றை நியமிக்காதவரை இப்பொறியிலிருந்து விடுபடமுடியாது என்பது அவர்களின் கருத்தாகும்.[79]

பாராளுமன்றின் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை மீண்டும் ஒருமுறை பலப்படுத்துவதற்காக இறைமை அதிகாரத்தையுடைய மக்களின் முன் பொதுத்தேர்தல் ஒன்றிற்கு செல்ல வேண்டுமென ஒருசிலர் யோசனை தெரிவித்த அதேசமயம் பாராளுமன்றத்தில் பிரதிபலிக்கப்படும் பலதரப்பட்ட கருத்துக்களை முடக்கி தனியொரு தலைமைத்துவத்திடம் அதிகாரங்களை குவிப்பதற்கான மக்கள் ஆணையைப் பெற்றுக்கொள்ள பொதுத்தேர்தலொன்றுக்குச் செல்ல வேண்டுமெனக் குறிப்பிட்டனர். அவர்களின் கருத்துப்படி பெரும்பான்மையான மக்கள் அவ்வாறான ஒரு தலைமைத்துவத்தை எதிர்பார்க்கின்றனர். அது வேறு யாருமல்ல. மஹிந்த ராஜபக்ச என்ற தனிநபர் ஆளுமை. அதற்காக மஹிந்த ராஜபக்சவின் வசீகரத்தை முதன்மைப்படுத்தி முன்வைக்கப்பட்ட சகல தர்க்கங்களும் சிங்களவர்களால் மட்டுமே முன்வைக்கப்பட்டிருந்தன என்பதையும் குறிப்பிட வேண்டும்.

79. 2018.11.06ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், மொனராகலை பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர், 2018.11.21ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், பண்டாரவளை பிரதேசத்தைச் சேர்ந்த முச்சக்கர வண்டிச் சாரதி, 2018.11.26ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், புத்தளம் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர், 2018.11.13ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், முல்லைத்தீவுப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர்.

80. 2018.11.03ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், புத்தள பிரதேசத்தைச் சேர்ந்த தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்..

"*மஹிந்த ராஜபக்சவைப்போல ஒரு சண்டியன் இந்நாட்டில் தலைவர் பதவிக்கு இதுவரையும் வரவில்லை. அவர் என்ன செய்தாலும் நாட்டை விற்றுத் தின்று ஏப்பம் விட்டாலும் யாருக்கும் பிரச்சினையில்லை. ஏனென்றால் இது அவர் காப்பாற்றிய நாடு.*"[80]

"*பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்குமிங்கும் தாவினாலும்கூட மக்கள் விரும்புவது மஹிந்த ஐயாவைத்தான். பாராளுமன்றத்தின் தீர்மானமாக இருக்கப்போவது தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் அதிகாரம்.*"[81]

"*தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் அதிகாரங்களுக்கு அடிபணியாமல் நாட்டைப் பற்றிச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வரவேண்டுமானால் பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டும்.*"[82]

இவ்வாறு பலதரப்பட்ட கருத்துக்களுடாக இறைமை அதிகாரத்தைக் கொண்டுள்ள மக்களிடம்தான் இதற்கான இறுதித் தீர்வுள்ளது என்ற விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. அதன்படி இவ்வாறானதொரு சூழமைவில் மக்கள் தம் பொறுப்புக்களை வெளிப்படுத்தும் விதம் பற்றி ஆராய்வது முக்கியமானது. அந்த வகையில் நாம் நேர்காணலுக்குட்படுத்திய 143 பேரில் 63 பேர் (44%) தேர்தலொன்றில் வாக்களிப்பதைத் தவிர அதற்கு அப்பாற்பட்டதொரு மக்கள் செயற்பாடு பற்றிய எந்தவொரு கருத்தினையும் முன்வைக்கவில்லை. பெரும்பாலானோர் தாம்

80. 2018.11.03ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், புத்தள பிரதேசத்தைச் சேர்ந்த தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்..

81. 2018.11.23ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், சியம்பலாண்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர்.

82. 2018.11.10ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், காலி பிரதேசத்தைச் சேர்ந்த சிறு வியாபாரி ஒருவர்

விரும்பும் அரசியல் கட்சி அல்லது அரசியல் ஆளுமையை அதிகாரத்திற்குக் கொண்டுவருவதிலும் அப்பாற்பட்ட எந்தவொரு கருத்தினையும் முன்வைக்கவில்லை.



ஐக்கிய தேசியக் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்ட "நீதியின் குரல்" மக்கள் பேரணி.

மூலம் : **http://asiamirror.lk/news/**

*"இதைத்தான் நீங்கள் செய்ய வேண்டுமென அவர்கள் சொன்னால் அதை நாங்கள் செய்வோம். அது எதுவாகவும் இருக்கலாம். பேரணி நடத்தச் சொன்னால் நடத்துவோம். வாக்களிக்கச் சொன்னால் வாக்களிப்போம்."*[83]

*"வாக்களிப்பதைத் தவிர எங்களால் வேறு என்னதான் செய்ய முடியும். வெற்றிலைக்கூறு ஒன்றை விற்றுக்கொள்வதே பெரும்பாடு. நாம் வேறு என்னதான் செய்ய முடியும்?"*[84]

83. 2018.11.03ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், புத்தள பிரதேசத்தைச் சேர்ந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்

84. 2018.11.06ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், பொலன்னறுவை பிரதேசத்தைச் சேர்ந்த சிறு வியாபாரி (பெண்)

கருத்துத் தெரிவித்தவர்களின் இன்னுமொரு தொகுதியினர் இந்த ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலைமையில் அமைதியாக இருக்க வேண்டுமென்பதையும், தாம் ஆதரவு தெரிவிக்கும் அரசியல் கட்சி அதிகாரத்திற்கு வந்த பின்னர் பொருளாதாரம் உட்பட ஏனைய சிரமங்களை குறுகிய காலப்பகுதிக்கேனும் தாங்கிக்கொண்டு அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டுமென்பதையும் வலியுறுத்தினர். இவ்வாறான ஒரு சூழ்நிலைமையில் அரசியலிலிருந்து விலகியிருப்பதுதான் புத்திசாதுரியம் என்பது மேலும் சிலரின் கருத்தாகும்.[85]

"*எம்மவர்கள் இதுவரைக் காலமும் பார்வையாளர்கள்தான். இனியும் அது அப்படித்தான் இருக்கும்.*"[86]

"*இலங்கை வாழ்வதற்கு ஒரு பொருத்தமான நாடு அல்ல. நாட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும்.*"[87]

"*எம்மவர்களால் எமது நாட்டை ஆளமுடியாவிட்டால் வேறு ஒரு நாட்டிலிருந்து வந்து பலவந்தமாக எமது நாட்டை ஆளவேண்டும்.*"[88]

85. 2018.11.04 திகதி நடாத்தப்பட்ட நேர்காணல் கொழும்பு பிரதேசத்தில் தனியார் துறையில் பணியாற்றும் ஒருவர், 2018.11.03 திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், தலவத்துகொட பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு மாணவர். 2018.11.02 திகதி நடாத்தப்பட்ட நேர்காணல், இரத்தினபுரி பிரதேசத்திலுள்ள உணவகமொன்றில் பணியாற்றும் ஒருவர்.

86. 2018.11.05ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், அநுராதபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயி.

87. 2018.11.11ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், மாத்தறை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர்.

88. 2018.11.13ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர்.

நாட்டின் பிரதான அரசியல் கட்சிகளினுடைய செயற்பாடுகளில் விரக்தி கண்டவர்கள் இதுபோன்ற கருத்துக்களைத் தெரிவித்து தமது அதிருப்தியைப் பதிவுசெய்தனர். இந்நிலையில் மேலும் சிலர் மாற்று அரசியல் பற்றி சிந்திப்பதற்கான காலம் வந்துவிட்டதாகத் தெரிவித்தனர். பாராளுமன்ற ஜனநாயகம், மக்களின் இறைமையதிகாரம் பற்றிய மிகவும் கூர்மையான கருத்துக்களைத் தெரிவித்தவர்களும் ஆக்கபூர்வமான மக்களின் செயற்பாடு தொடர்பில் தெளிவற்ற தன்மையைக் கொண்டிருந்தனர் என்பது எமது பொதுவான அவதானிப்பு.

மக்களின் அசமந்தப்போக்கு தொடர்பில் தமது கவலையை வெளியிட்ட ஒரு சிலரையும் காணமுடிந்தது. ஆனால், அவர்களும் இதற்கெதிராக ஆக்கபூர்வ மக்கள் செயற்பாடு தொடர்பான கருத்துக்களைத் தெரிவிப்பதில் தவறியிருந்தனர். இங்கு, பாராளுமன்றத்தின் ஜனநாயகத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் உறுதிப்படுத்துவது தொடர்பில் மிகுந்த ஆர்வத்தை வெளிப்படுத்திய வட- கிழக்கைச் சேர்ந்தவர்களின் பிரதிபலிப்புகள் கூடுதலாக மேற்கிளம்பியிருந்தன. அவர்களைப் பொறுத்தமட்டில் ஆக்கபூர்வ மக்கள் செயற்பாடு ஒன்றுக்கு வாய்ப்பில்லை. போரின் முடிவோடு அவர்களின் ஆற்றல்களும் ஓய்ந்துவிட்டன. அதன்படி, தீர்க்கமான இந்த அரசியல் சூழமைவில் சிங்களவர்களே பிரஜைகளுக்கான பொறுப்பை நிறைவேற்ற வேண்டியுள்ளது. யாழ்ப்பாணத்தில் நாம் நேர்காணலுக்கு உட்படுத்திய ஒருவர் தவிர்ந்த மற்றைய அனைவரும் இதனை தென்னிலங்கையிலுள்ள சிங்கள அரசில் ஏற்பட்ட ஒரு நெருக்கடியாகவே பார்க்கின்றனர். அவர்களுள் ஒருவர் ‘சிங்களவர்கள் இணைந்து தமக்காக உருவாக்கிக்கொண்ட 19வது அரசியலமைப்புத் திருத்தத்தை நகைப்புக்கு உட்படுத்துகிறார்கள். இந்நிலையில் அவர்கள் எமக்கு அரசியல் தீர்வொன்றை வழங்கியிருந்தால் அதை சிதைத்திருப்பார்கள்[89] என்றார். போர் முடிந்து ஒரு தசாப்தம்

உருண்டோடிய பின்னரும் நாட்டில் தோன்றியுள்ள நெருக்கடியை வடக்கு மக்கள் அது தமது தேசத்திற்குரியதல்ல மாறாக பிரதேசத்திற்கு உரியதென உணர்வதைப் பற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது. 26 ஆம் திகதி சம்பவத்திற்கு ஆதரவு தெரிவித்து மஹிந்த ராஜபக்ச அதிகாரத்திற்கு வந்த மகிழ்ச்சியில் கருத்துத் தெரிவித்த பலர், பின்னர் உருவான அரசியல் நெருக்கடியை அடுத்து திரிபுபடுத்தப்பட்ட பாராளுமன்றத்திற்குப் பதிலாக பொதுத் தேர்தல் ஒன்றினூடாக மக்களின் விருப்பத்திற்கு வாய்ப்பளிக்க வேண்டுமெனத் தெரிவித்தனர். எனினும், மற்றைய அனைத்தையும் மஹிந்த ராஜபக்ச நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையால் அவர்கள் ஆக்கபூர்வமான பிரஜைகளின் செயற்பாடு பற்றிக் கருத்துத் தெரிவிக்கவில்லை. அதுபற்றிய அவர்களின் பதில்கள் மிகவும் குறுகியனவாகவும் உறுதியானவையாகவும் இருந்தன. குருநாகலில் நாம் சந்தித்த முச்சக்கரவண்டி ஓட்டுநர் அதை பின்வருமாறு சுருங்கக் கூறினார்.

> "*எம்மால் ஒன்றும் செய்வதற்கில்லை. அதையெல்லாம் மஹிந்த ஐயா பார்த்துக்கொள்வார்*"[90]

## முடிவுரை

நவம்பர் 26 சம்பவம் நாட்டு மக்களை மிகவும் குறுகிய காலத்தில் முன்னொருபோதும் இல்லாதவாறு சட்டம் மற்றும் அரசியல் பற்றிய சொல்லாடல்களுக்கு இழுத்துச் சென்றுள்ளது. அன்று தொடக்கம் இக்கட்டுரை எழுதி முடிக்கப்பட்ட டிசெம்பர் 15 ஆம் திகதி

---

89. 2018.11.14ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், யாழ்ப்பாணம் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர்.

90. 2018.11.01ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்காணல், குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்த முச்சக்கரவண்டிச் சாரதி ஒருவர்.

வரையான காலப்பகுதியில் மக்கள் கடந்து வந்த நாட்கள் ஓர் இடைவெளியினூடாக பயணிப்பதாக ஒருபோதும் இருக்கவில்லை. பெரும்பாலானோர் மிகவும் துடிப்புடனும், விமர்சனக் கண்ணோட்டத்துடனும் இத்தோற்றப்பாடு குறித்துச் சிந்தித்தனர் கலந்துரையாடினர். ஒருசில சந்தர்ப்பங்களில் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் இதுபோன்ற தீவிரமான அரசியல் சூழ்நிலை தவிர்ந்த சாதாரண ஒரு சூழலில் எந்த வகையிலும் வெளிப்படும் சாத்தியம் இல்லையென்றே கூறவேண்டும். இவை சமூகத்தில் மிகவும் சாதாரண நிலையிலுள்ள ஆண்கள் மற்றும் பெண்களுடனான உரையாடல்களில் வெளிக்கொணரப்பட்டிருப்பது முக்கியமானது. எவ்வாறாயினும், கூர்மையான அரசியல் கருத்துக்களைத் துடிப்பான பிரஜைகளின் வகிபங்காக மாற்றிக்கொண்டதற்கான சிந்தனை அல்லது தயார்நிலை அவர்களிடமிருந்து அவ்வளவாக வெளிப்படவில்லை.

முக்கியமானதொரு அரசியல் சூழ்நிலைமையில் சமகாலத்தின் நிலைகள் தவிர்க்கப்படுவதை தடுப்பதையும், வரலாற்றின் மனிதர்கள் அதற்கு எவ்வாறு பிரதிபலிப்புச் செய்கின்றனர், அதேபோல பொருள்விளக்கம் தருகின்றனர் என்பதை ஆராய்வதையும் நோக்கமாகக் கொண்டு நாட்டிலுள்ள 143 பேரை இணைத்துக்கொண்டு நடாத்தப்பட்ட இந்த ஆய்வில் வரையறைகள் இருக்க வாய்ப்பு உள்ளபோதும், வளர்ச்சியடைந்த ஓர் அரசியல் சமூகத்திற்கான துடிப்புள்ள பிரஜைகளின் வகிபங்கு தொடர்பான உரையாடலை கைவிட முடியாது என்ற விடயம் மீண்டும் ஒருமுறை வெளிப்பட்டுள்ளதென்பதை ஒருபோதும் மறுக்க முடியாது. ■

**2018 ஒக்டோபர் 26 சம்பவம் மற்றும் அதைத் தொடர்ந்து பாராளுமன்றத்திற்குள்ளும் பாராளுமன்றத்திற்கு வெளியிலும் நிகழ்ந்த சம்பவங்களுக்கு எதிராக மக்களினது கருத்துவெளிப்பாடு.**




மக்கள் விடுதலை முன்னனியினால் 2018.11.01 ஆம் திகதி நுகெகொடையில் ஏற்பாடு செய்யப்பட்ட மக்கள் பேரணி.




ஓரினச் சேர்க்கையாளர்களை அவதிக்கும் வகையில் ஜனாதிபதியினால் தெரிவித்த கருத்திற்கு எதிராக "ஜனநாயத்திற்கான பட்டாம்பூச்சி" அமைப்பு 2018.12.17 திகதியன்று நடாத்திய எதிர்ப்பு ஆர்பாட்டம்.



"இலங்கைப் பெண்கள்" அமைப்பினால் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் 2018.12.18 ஆம் திகதி ஏற்பாடு செய்திருந்த எதிர்ப்பு ஆர்பாட்டம்

”பிரகாசிக்கும் இதயங்கள்” அமைப்பினால் கொழும்பு நகரின் பல்வேறு இடங்களில் 2018.10.14 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்பாட்டம்.






சிவில் சமூக அமைப்பினால் லிப்டன் சுற்றுவட்டத்தில் 2018.10.30 திகதி முதல் பல வாரங்களுக்கு தினமும் நடைப்பெற்ற ஆர்பாட்டம்.

பிரஜைகள் அமைப்பு மூலமாக கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் 2018.12.19 ஆம் திகதி நடாத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்பாட்டம்.



"

இலங்கை குடியரசில் இறைமை மக்களுக்குரியதாகவும் பராதீனப்படுத்த முடியாததாகவும் இருக்கும், இறைமை என்பது ஆட்சித் தத்துவங்கள் அடிப்படை உரிமைகள், வாக்குரிமை ஆகியவற்றை உள்ளடக்கும்.

- மூன்றாவது உறுப்புரை
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பு